**DEPOSITION OF WITNESS**
**In the Court of the Principal District Munsif, Sankarankovil.**
**O.S.No.174/2020**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | Pw1 |
| Name | : | சண்முகத்தாய் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 02.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 02nd June 2025.

**முதல் விசாரணை :**

நான் வழக்கின் வாதி. நான் இன்று இந்த வழக்கில் எனது சத்தியபிரமாணம் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 23.01.2008 வேலுச்சாமி மற்றும் அவரின் மகனான சுரேஷ் ஆகியோர்கள் முத்தம்மாளுக்கு பிறப்புவித்துக்கொடுத்த பதிவுக்கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. புல எண்.1133/2D1 க்கான வேல்ராஜ் பெயரிலான பட்டா கணிணி நகல் தாக்கல் செய்கிறேன். **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. புல எண்.1133 க்கான புல வரைபடம் கணிணி நகல் தாக்கல் செய்கிறேன். **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட தோராய வரைபடம் தாக்கல் செய்கிறேன். **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(வா.சா.ஆ.4 தோராய வரைபடம் ஆவணத்திற்கு பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு வழக்கிற்கு இணங்க வரைபடம் தயார் செய்யப்பட்டிருப்பதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.